Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0 / பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு

குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 20 } ஈரோடு 5-4-1947 பங்குனி மீ 23உ { மலர் 26

என் இஸ்லாத்தில் சேர வேண்டும்?

மாறுபட்ட கருத்துடையவர்களுக்குப் பெரியார் பதில்

பெரியார் ஈ. வெ. ரா.

'இழிவு நீங்க இஸ்லாம்' என்ற தலைப்புக்குக் காரணமான பெரியாரின் திருச்சிப் பேச்சுக்கு வந்த பல அதிருப்தி குறிப்புகளுக்குப் பெரியார் பதில்.

தோழர்களே,

எனது 18-3-47ந் தேதி திருச்சி சொற்பொழிவையும், தலையங்கத்தையும் குடி அரசில் படித்த தோழர்கள் பலரில் சுமார் 10, 15 தோழர்கள் வரை கடிந்தும், கலகலத்தும், தயங்கியும், தாட்சண்யப்பட்டும், மிரட்டியும், பயந்தும், கண்டிப்பாயும், வழவழா என்றும் பலவிதமாய் ஆசிரியருக்கும், எனக்கும் கடிதங்கள் எழுதி இருக்கிறார்கள். நேரிலும் சிலர் வந்து நீண்ட சொற்போர் நடத்தினார்கள். ஆதலால் அவைகளுக்குச் சமாதானம் சொல்லும் முறையிலும், நேரில் பேசியத் தோழர்களுக்குச் சமாதானம் சொன்னதைத் தெரிவிக்கும் முறையிலும் இதை எழுதுகிறேன்.

கோபப்படாமல் ஆத்திரப்படாமல் மத மயக்கம் இல்லாமல் சிந்தித்துப் பாருங்கள்.

ஒரு மதத்தின்மீது நமக்குள்ள மதவெறுப்புக் காரணமாகவே அந்த மத மக்கள் மீதும் வெறுப்படைகிறோம்

இன்று முஸ்லிம்கள்மீது இந்துக்களுக்கு உள்ள வெறுப்புக்குக்காரணம் இஸ்லாம் மத வெறுப்பேயாகும்,

இஸ்லாம் மதமானது ஆரிய மதத்திற்கு (இந்து மதத்திற்கு) எதிரானதாக இருப்பதாலேயே இஸ்லாத்தை இந்துக்கள் (ஆரியர்கள்) வெறுக்கிறார்கள்.

ஏன் எதிராய் இருக்கின்றது என்றால் இஸ்லாம் இந்து மதத்தின் அடிப்படையையே தகர்த்துவிடுகிறது.

இந்து மதம் என்னும் ஆரிய மதத்திற்குப் பல கடவுள்கள், உருவக் கடவுள்கள் உண்டு. உருவங்களும் பல மாதிரியான உருவங்களாகும்.

மக்களுக்குள் பல ஜாதி பேதங்கள் உண்டு

பிறவிலேயே ஜாதி வகுக்கப்பட்டிருக்கிறது.

மக்கள் பிராமணன், சூத்திரன் பஞ்சமன் (பறையன்) என்ற உயர்வு தாழ்வு கொண்ட ஜாதியினராகப் பிரிக்கப்பட்டுள்ளனர். இந்தக் கொள்கைக்கு நாம் ஆளாகி அவற்றுள் கீழ் ஜாதியாய் இருக்கிறோம்

இஸ்லாம் மதத்தில் ஒரு கடவுள் தான் உண்டு. அதுவும் உருவமற்ற கடவுள் தான்.

இஸ்லாத்தில் ஜாதிகள், பேதங்கள், உயர்வு தாழ்வுகள் கிடையாது

பிறவியின் காரணமாய் ஜாதி பாகுபாடும், மேன்மை—இழிவும் கிடையாது.

அதாவது,

இஸ்லாத்தில் பிராமணன் (மேல் ஜாதி), சூத்தி (கீழ்ஜாதி), பறையன் (கடை ஜா... பஞ்சமன் என்பவர்கள் கிடையா.

சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் இஸ்லாம் ஒரு கடவுள், ஒரு ஜாதி அதாவது ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற அடிப்படையைக் கொண்டது. இந்த அடிப்படை திராவிடனுடையது; திராவிடனுக்கு வேண்டியது என்றும் சொல்லலாம்.

இந்து (ஆரிய) மதம் என்பது, பல கடவுள்கள், பல ஜாதிகள்—அதிலும் கடவுள்களால் சிருஷ்டிக்கப்பட்ட ஜாதிகள்—என்கின்ற அடிப்படையைக்கொண்டது.

இந்தப் பல கடவுள், பல ஜாதி என்கின்ற தன்மைகளால் ஆரியர்கள் [பிராமணர்கள்] நல்ல வசதியும் பயனும் அடைகிறார்கள். திராவிடர்கள் கேடும், கீழ்மையும், மனிதஉரிமைத் தடையும் அடைகிறார்கள். ஆதலாலேயே இஸ்லாத்தின் கொள்கை பிராமணர்களுக்கு மிகக் கேடானதாக இருந்து வருகிறது. திராவிடர்களுக்கு இஸ்லாத்தினால் நலம் ஏற்பட இழிவு நீங்க வசதியாகிறது.

ஆகவே தான் பார்ப்பனர்கள் [பிராமணர்கள்—ஆரியர்கள்] இஸ்லாத்தை வெறுக்கச் செய்யவேண்டியவர்களாகிறார்கள்.

இஸ்லாம் மதத்தை எல்லா மக்களும் அனுசரித்தால் பிராமணர் என்கின்ற ஜாதியே, சமுதாயமே இரா; பல கடவுள்களும், விக்கிரக [உருவ]க் கடவுளும் இருக்கமாட்டா. இந்த விக்கிரகக்கடவுள்களுக்குப்படைக்கும் பொருள் வருவாயும் நின்றுபோகும்.

இதனாலேயே இஸ்லாம் ஆரியரால் வெறுக்கப்படுகிறது; வெகு காலமாய் வெறுக்கப்பட்டு இஸ்லாமி

யர்கள்மீது பல பழிகள் சுமத்தி மக்களுக்குள் வெறுப்புணர்ச்சி ஊட்டப்பட்டும் வருகிறது. ஆகவே இந்தப்படி இஸ்லாம் மதம் வெறுக்கப்படுவதினால் இஸ்லாமியரும் ஆரியரால் வெறுக்கப்பட்டும், ஆரிய மத அடிமைகளான சூத்திர [திராவிடர்]களாலும் வெறுக்கப்பட்டு மாறும்செய்யப்பட்டுவிட்டது ஆகவே தான் இஸ்லாத்தின்மீது உள்ள வெறுப்பாலேயே திராவிட இந்துக்கள் என்பவர்களும் இஸ்லாமியர்களான முஸ்லிம்களை வெறுத்துப் பழகிவிட்டார்கள் என்கிறேன்.

இஸ்லாத்தைப்போல் கிருஸ்துவ மதம், சீக்கிய மதம், ஆரிய சமாஜம், பிரம சமாஜம், பௌத்த சமாஜம் முதலியவை இந்துக்களால் வெறுக்கப்படுவதில்லை.

ஏன் என்றால் கிருஸ்து, சீக்கிய முதலிய மதங்களும் இஸ்லாத்துக்கு ஒரு அளவுக்கு விரோதமானவைகளாதலால் இவை இஸ்லாத்தின் பொது விரோதிகள் என்கின்ற முறையில் இந்து, கிருஸ்துவர், சீக்கியர் ஆகிய மூவருக்குள் விரோதமில்லாமல் கூடிய வரை ஒற்றுமையாகவும் இருக்கிறார்கள். அநேக பார்ப்பனர்கள்கூட கிருஸ்துவ மதத்தைத் தழுவி இருக்கிறார்கள். பல பார்ப்பனர்கள், கிருஸ்துவ மதஸ்தாபனங்களில் சிப்பந்திகளாகவும் இருக்கிறார்கள். கிருஸ்துவ மதத்தைத் தழுவும் இந்து ஒருவன் இங்கு இந்த ஜாதிக்கொள்கையைத் தழுவ அனுமதிக்கப்படுகிறான். சீக்கியனும் அநேகமாய் இந்துமதக் கொள்கைப்படித்தான் கடவுளை வணங்குகிறான். ஆனால் உருவக் கடவுளுக்குப் பதிலாகப் புஸ்தகத்தைக் கடவுள் உருவமாய் வைத்து இந்து பிரார்த்தனை முறையில் வணங்குகிறான். சீக்கியனும் இந்துக்கள் போலவே [அவ்வளவு இல்லாவிட்டாலும்] ஒரு அளவுக்கு ஜாதிப் பாகுபாடு அனுசரிக்கிறான். சீக்கியரில் தீண்டப்படாத, கீழ்ஜாதி மக்கள் என்று ஒரு கூட்டம் இருக்கச் செய்யப்பட்டு இருந்து வருகிறது. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உரிமைகூட அதற்கு வழங்கப்பட்டிருக்கிறது. தனித் தொகுதிப் போராட்டமும், சீக்கிய வகுப்புக்குள் இருந்துவருகிறது. ஆனால் ஆரியப்பத்திரிகைகள் இதை வெளியில் தெரியாமல் மறைத்து வருகின்றன. நான் பஞ்சாப்புக்குச் சென்றபோது நேரில் அறிந்த சேதி இது.

கிருஸ்தவரிலும் நம் நாட்டில் தீண்டப்படாத கிருஸ்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சிலர் படிப்பிக்கப்பட்டு உபாத்தியாயர் வேலைகொடுக்கப்பட்டிருப்பதோடு சரி என்பது அல்லாமல் மற்றபடி அவர்களுக்குக் கிருஸ்தவரிலாகட்டும் இந்துக்களிலாகட்டும் இஸ்லாமியர்களுக்கு அளிப்பது போன்ற உரிமைகூட அளிக்கப்பட்டிருக்கவில்லை. ஆதலால் ஆரியர்கள் கிருஸ்துவம், சீக்கியம் ஆன மதங்களுடன் நேசமாக இருக்கிறார்கள். பௌத்தம், சமணம் முதலியவையும் நடப்பில் இஸ்லாத்தை வெறுப்பதால் இந்துவுடன் வேஷத்தில் உறவாடுவதால் அவைகளிடம் ஆரியருக்கு அவ்வளவு வெறுப்பு இல்லை.

எனவே இஸ்லாம் மதம் பார்ப்பனர்களால் சுய லாபம் வகுப்புநலம் காரணமாக வெறுக்கப்பட்டதாக இருப்பதால் இஸ்லாமியர்கள் (முஸ்லிம்கள்) பார்ப்பன ஆரிய அடிமைகளாலும் மூடநம்பிக்கையால் வெறுக்கப்பட்டு வருகிறார்கள். எனவே இன்னும் இந்துமதத் தலைவர்களுக்கு முஸ்லிம்களை வெறுக்கச்செய்வதல்லாமல் இந்துமதப் பிரசாரத்தின் நோக்கிய தத்துவம், கொள்கை, பணி என்ன என்று யாராவது சொல்ல முடியுமா?

இஸ்லாம் யாரால் ஏற்பட்டது? புத்தர், கிருஸ்து போன்ற மற்றொரு சீர்திருத்தவாதியால் ஏற்பட்டதே அல்லாமல் வேறு என்ன?

இஸ்லாம் ஏற்பட்டது எதற்கு? என்றால் பல கடவுள் கொள்கை, உருவக் கடவுள் கொள்கை, மக்கள் பிறவிபேதக் கொள்கை ஆகியவைகளை ஒழித்து ஒரு கடவுள், ஒரு சமூகம் [ஜாதி] ஆக்குவதற்கும், மூடநம்பிக்கை, விக்கிரக வணக்கத்தை ஒழித்து பகுத்தறிவுக்கு இணங்கவும் ஏற்பட்டதே யாகும்.

இதை அராபியர் மதம், துருக்கியர் மதம் என்பதுபோல் இதைத் திராவிடர் மதம், அல்லது திராவிடமதம் என்று வேண்டுமானாலும் சொல்லிக்கொள்வதில் நமக்கு ஆட்சேபணை இல்லை. எப்படியாவது மக்கள் ஜாதிபேதம், பிறவி உயர்வு தாழ்வு, பல கடவுள், உருவ வழிபாடு ஆகியவற்றில் இருந்து விலகவேண்டும். பார்ப்பனுக்கு அடிமையாய் இருந்து இழிவைத் தலையெடுக்க முடியாமல் இருக்கும் நிலைமையிலிருந்து மீளவேண்டும் என்பதைத் தவிர வேறு கருத்து ஒன்றையும் கொண்டு நாம் இப்படிச் சொல்லவில்லை என்பதைத் திராவிடர்கள் உணரவேண்டும்.

“வெட்கக்கேடு”

பார்ப்பானிடம் அன்பு, பார்ப்பானிடம் நேசம் வைத்துப் பார்ப்பான் போல வேஷம்போட்டு, நடித்துக்கொண்டு சூத்திரனாக இருக்கச் சம்மதிக்கும் ஒருவன், அதுவும் திராவிடனாக இருப்பவன் இஸ்லாமியனிடம் அன்பு, நேசம், வேஷம், நடிப்பு, நடித்து சூத்திரனல்லாதவனாக, திராவிடனாகவே இருப்பதில் என்ன வெட்கக்கேடு என்பது நமக்கு விளங்கவில்லை. மொத்தத்தில் 100க்கு 10 பேர்களான மக்களிடம் நேசம் பூண்டு கலந்து சுதந்திரத்தோடு, மானத்தோடு வாழ வெட்கமோ வெறுப்போ பட்டுக்கொண்டு, 100க்கு 3பேராய் இருக்கும் நம்மிலும் வேறுபட்ட, நம்மை இழிவுபடுத்

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

“மயில்”

[மாத வெளியீடு]

ஆசிரியர்:- தூய எழிலழகன்

முதலாவது வெளியீட்டில்:
சி. என். அண்ணாதுரை M A.,
அ. இராமசாமி M. A, L. T,
மு. வரதராசனார் M O L.
ஏ.வி.பி. ஆசைத்தம்பி,
மற்றும்
பல அறிஞர்கள் எழுதியுள்ளனர்
சித்திரை 15ம் நாள் வெளிவருகிறது
விளம்பரங்கள்
ஏற்றுக்கொள்ளப்படும்:

உரிமையாளர்:-
கே. எம். சீனிவாசன்
எங்கும் விற்பனையாளர்கள் தேவை.
விபரங்கட்கு:-

நிர்வாகி, “மயில் நிலையம்”
திருப்பத்தூர் [வ. ஆ.]

இந்து மதத்தில் திராவிடர் நிலை

இஸ்லாம் என்றால் நாணி, கோணி, கோபம் கொள்ளும் திராவிட இந்து (சூத்திர) தோழனே! 'இந்து' மதம் என்றால் என்ன? அதில் உன் நிலை என்ன என்று அறிவிப்பார்.

இந்துமதம் என்னும் மாத்திரை யில் (மருந்து மாத்திரை) இது ஒரு உரைப்பு.

இந்து மதம் என்பது வேதமத மாகும். ஏனெனில் இந்துமதத்திற்கு வேதம்தான் பூர்வாதாரமாகும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் அந்த வேதத்தின் தன்மையைப்பற்றிச் சிறிது சிந்திப்போம்.

1. 'சூத்திரன்' சமீபத்தில் இருக்கும்போது வேதம் ஓதக்கூடாது:
[அத். 4, சு. 99.]

2. 'பாபிகள்' அருகில் இருக்கும் போது வேதம் ஓதக்கூடாது:
[அ. 4, சு 109]

3. நாய், கழுதை இவைகள் அழும்போது வேதம் ஓதக்கூடாது:
[அ. 4, சு. 115]

இவைகளிலிருந்து ஒரு இந்து சூத்திரனுக்கும் (திராவிடனுக்கும்) வேதத்திற்கும் உள்ள சம்பந்தமும், சூத்திரன் வேத மதத்தில் மதிக்கப் படும் தன்மையும், இஸ்லாம் என்றால் கோணும் இந்து திராவிடர்கள் தெரிந்துகொள்ளலாம்.

இது மற்றொரு உறைப்பு:

பொழுது விடியாமல் இருக்கும் போதும், பொழுதுபோன பின்பும் பிராமணன் சூத்திரனுடன் வழி நடக்கக்கூடாது. [அ. 4 சு. 140]

பிராமணன் தனக்கு [சூத்திரனுக்கு] விரோதம் செய்தாலும், தான் (சூத்திரன்) பிராமணனுக்கு விரோதம் செய்யக்கூடாது.

நீதி விசாரணை

"பிராமணகுலத்தில் பிறந்து கர்மானுஷ்டானமில்லாத பிராமணன் ஆனாலும் அவன் நீதி விசாரணை செய்யலாம்.

சூத்திரன் ஒருபோதும் நீதி விசாரணையோ, தீர்ப்போ செய்யக் கூடாது." [அ. 8, சு, 20]

"எந்தத்தேசத்தில் நீதி தர்மவிசாரணையைச் சூத்திரன் செய்கிறானோ அந்தத்தேசம் முழுவதும் துன்பத்தில் ஆழ்ந்து போகும்." [அ 8, சு. 21]

இதிலிருந்து சூத்திரர்கள் [திராவிடர்கள்] ஏன் நீதிபதிகளாக இலாகா தலைமைக்கு நியமிக்கப்படுவதில்லை யென்பதும், சூத்திரர் அல்லாத முஸ்லிம்கள், கிருஸ்தவர்கள் ஏன் நியமிக்கப்படுகிறார்கள் என்பதும் நன்றாய் விளங்குகிறதல்லவா?

"சூத்திரன் பிராமணனைத் திட்டினால் அவன் நாக்கை அறுக்கவேண்டியது:" [அ. 8, சு. 270]

"சூத்திரன் பிராமணனைப் பெயர் ஜாதி சொல்லி இகழ்ச்சியாகத் திட்டினால் சூத்திரன் வாயில் 10 அங்குல முள்ள கம்பியைக் காய்ச்சி எரிய எரிய வைக்கவேண்டியது:" [அ. 8 சு. 271]

"பிராமணனுக்கு நீ இதைச்செய்ய வேண்டுமென்று கட்டளை இடுகிற சூத்திரனுடைய வாயிலும், காதிலும் எண்ணெயைக் காய்ச்சி ஊற்ற வேண்டியது" [அ 8 சு. 272.]

"பிராமணன், க்ஷத்திரியன், வைசியன் ஆகிய மூன்றுபேர்களில் யாரை யாவது சூத்திரன் அடித்தால் எந்த இடத்தில் அடித்தானோ சூத்திரனுடைய அந்த [illegible] வெட்டிவிடவேண்டியது." [அ. 8. சு. 279]

"கையினாலாவது, தடியினாலாவது அடித்தால் சூத்திரனின் கையையும் வெட்டிவிடவேண்டும்."
[அ. 8. சு. 280]

'பிராமணனுடைய ஆசனத்தில் உட்கார்ந்த சூத்திரனை இடுப்பில் சூடுபோட்டாவது, ஆசன பாகத்தில் சிறிது அறுத்தாவது ஊரைவிட்டு விரட்டிவிடவேண்டும்:"
[அ. 8 சு. 281]

"சூத்திரன் பிராமணன்மீது எச்சில் துப்பினால் சூத்திரனின் உதட்டை அறுத்துவிடவேண்டும்:'
[அ. 8. சு. 282]

இந்த மாத்திரை எப்படி வேலை செய்கிறது என்பதைப் பார்த்துக் கொண்டு பிறகு இன்னம் இரண்டு உரைப்பு உரைக்கலாம்.

திருக்கழுகுன்றம் திராவிடர் கழகத்தில் 9-3-47ல் தோழர் செல்வராசன் தலைமையில் பொதுக்கூட்டம் ஒன்றும், உறுப்பினர் கூட்டம் ஒன்றும் நடைபெற்றன. விசயன் அழகு, குமாரவேல் ஆகிய தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள். கொடி யேற்றுவிழா நடைபெறவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. விழாச் செலவுக்கு வேண்டிய பணத்தைத் தோழர் தா. ரங்கநாதம் அவர்கள் தருவதாக ஏற்றுக்கொண்டார். மணி அவர்கள் இன்னிசைப் பாடினார்.

விற்பனைக்குத் தயார்!

தத்துவ விளக்கம்.

சேலம் கல்லூரியில் பெரியார் சொற்பொழிவு.

விலை அணா 12.

ரயில்வே ஸ்டேஷன்களிலுள்ள எல்லா ஹிக்கின்பாதம் புக்ஸ்டால்களிலும் கிடைக்கும்.

நாதன் & கோ, ஈரோடு.

குடி அரசு

1947 ௵ ஏப்ரல் ௴ 5௳

தகுதிக்கு ஏற்றதுதான் நிலை

இழிநிலை நீங்கத் தகுதி ஆகுங்கள்!

மக்களாகட்டும், சமுதாயமாகட்டும், நாடாகட்டும் அவை எந்த நிலையில் இருந்தாலும் அவற்றின் தகுதிக்கு ஏற்றதாகத்தான் அந்த நிலைகள் பெரிதும் இருக்கும் என்பது நியாயமான பேச்சேயாகும்.

ஒரு கூட்ட மக்கள் இழிநிலையில் இருக்கிறார்கள் என்றால் அது அந்தக்கூட்ட மக்களின் தகுதிக்கு ஏற்றது என்று சொல்ல வேண்டுமே தவிர மற்றபடி அவ்விழிமக்கள் மற்றவர்களால் இழிநிலையில் வைக்கப்பட்டார்கள் என்று சொல்லுவது அறிவுடைமையான, அர்த்தபுஷ்டி உள்ளதான பேச்சாகாது. அதுபோலவே ஒரு நாடு அடிமைத் தன்மையில் இருக்கிறது என்றால் அந்தத் தன்மை அந்நாட்டின் தகுதிக்கு ஏற்றதே தவிர அடிமை கொண்ட மக்கள் தன்மையால் அடிமை நிலை எய்திற்று என்று சொல்லுவதும் யோக்கியமான சொல்லாகாது.

ஆங்கிலேயன் இந்தியநாட்டை அடிமை கொண்டதற்கு எது காரணமோ அதேதான் ஆரியன் திராவிடர்களை இழிநிலையில் வைத்துப் பயன்பெறுவதற்கும் காரணமாகும்.

உதாரணமாக இன்று ஆங்கிலேயன் இந்நாட்டைத் தனது ஆதிக்கத்தில் இருந்து விடுவித்து விட்டுவிட்டுப் போகிறேன் என்றால், இந்தியர்கள் அதைத் தைரியமாய் ஏற்றுக் கொள்ள முடியாமல், கலகம் குழப்பம் நடத்திக்கொண்டிருப்பதற்குக் காரணம் இந்தியரின் தகுதி இன்மை என்பதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும்?

அதுபோலவே திராவிடர்களை ஆரியர்கள் இனிமேல் அடிமை என்றோ, சூத்திரர் என்றோ சொல்லி வலியுறுத்தத் தகுதியற்ற தன்மையில் இருந்தாலும், திராவிடர்கள் சூத்திரன்; அடிமை என்கின்ற தன்மையை வெறுக்க முடியாமல் இருப்பதற்குக் காரணம் இன்னும் திராவிடன் தகுதிப் பெறவில்லை என்பதைத் தவிர வேறு என்ன இருக்கமுடியும்?

"தகுதி உடையவன் அடைந்தே தீருவான், தகுதியற்றவன் பிறர் கொடுத்தாலும் அடைய மாட்டான்" என்பது நியாயமான பேச்சேயாகும்.

ஆரியர் தங்கள் ஆதிக்கம் நிலைத்திருக்கப் பாடுபடுகிறார்கள். முஸ்லிம்கள் தங்கள் ஆதிக்கம் நிலைத்திருக்கப் பாடுபடுகிறார்கள். அதுபோலவே தொழிலாளிகள் தங்கள் நலனுக்கும், ஷெடியூல் வகுப்பார் என்னும் மக்கள் தங்கள் நலனுக்கும், ஆசிரியர்கள் தங்கள் நலனுக்கும், வியாபாரிகள் தங்கள் நலனுக்கும், மார்வாடி, பனியாக்கள் தங்கள் நலனுக்கும் இப்படியாகப் பலப்பல லட்சியமுள்ள மக்கள் தங்கள் தங்கள் நலனுக்குப் பாடுபடுகிறார்கள்

இந்தத் திராவிடர்கள் (சூத்திரர்கள்) எதற்காகவாவது பாடுபடுகிறார்களா? இவர்களுக்கு ஏதாவது ஒரு பொது லட்சியம் உண்டா? இவர்களது வனுவான இழிவைப்பற்றியாவது கவலைப் படுகிறார்களா? கலைக்குக் காவியத்துக்கும், புராணத்துக்கும், இதிகாசத்துக்கும், மொழிக்கும், சமயத்துக்கும் என்பதாகத் தங்கள் வாழ்வின் உயர்வுக்கும், இழிவு நீக்கத்திற்கும் சம்மந்தமில்லாத வயிறுநிறைந்த ஆரியர்கள்போல் ஏதேதோ காரியத்தில் கவலையைக் காட்டுகிறார்களே தவிர இழிவு நீங்கும்படியான சமுதாயத்துக்குப் பயன்படும்படியான காரியம் எதற்காவது கவலைப் படுகிறார்களா?

இதைத்தான் நாம் திராவிடர் தகுதிக்கு ஏற்றதுதான் நிலை என்று சொல்லுகிறோம்.

இஸ்லாம் ஆட்சி இந்தியாவில் இருந்து விலகினநாள் முதல் இன்றுவரை இந்நாட்டில் எல்லாத் துறையிலும் ஆரிய ஆட்சி சர்வாதிகாரம் செய்து வந்ததே தவிர என்றாவது பிரிட்டிஷ் ஆட்சி இருந்தது என்று எந்த உண்மை அரசியல்வாதியாவது சொல்லமுடியுமா? அன்றியும் அரசியல் கிளர்ச்சி என்பதாக ஒன்று (காங்கரஸ்) இந்நாட்டில் நடந்துவந்ததானது துவக்கத்தில் இருந்து முஸ்லிம்களுக்கும், திராவிடர்களுக்கும் விரோதமாக நடந்து வந்தது என்பதல்லாமல் என்றாவது பிரிட்டிஷாருக்கு விரோதமாக ஏதாவது நடந்தது என்று யாராவது சொல்லமுடியுமா? இந்தச்சந்தர்ப்பங்களில் முஸ்லிம்கள் விழித்துக்கொண்டு தங்களைப் பாதுகாத்துக்கொள்ள முயற்சிசெய்து இன்று கிளர்ச்சி செய்யும் தன்மைக்கு வந்துவிட்டார்கள் என்று சொல்லலாமே தவிர திராவிடரில் யாராவது இதை உணர்ந்தார்களா? கவலைப்பட்டார்களா? ஏதாவது செய்ய முன் வந்தார்களா? என்று யோசிக்கவேண்டுகிறோம். திராவிடர்களுக்குக் குறை இல்லையா? இழிவு இல்லையா? முன்னேற்றத் தடை இல்லையா? கவலைப்பட வேண்டாத மாதிரி எது இல்லாமலிருக்கிறது? வெட்கப்படும் மாதிரி, வேதனைப்படும் மாதிரி எத்தனை கேடுகள்

இருக்கின்றன. இவ்வளவு கேடுகள், இழிவுகள் இருந்தும் ஒரு திராவிடனுக்கும் கவலையோ வெட்கமோ ஏற்பட்டதாகக் காணக்கூடவில்லையே ஏன்? இதைத்தான் நாம் திராவிடன் மனிதத் தன்மைப்பெற, மானம் பெறத் தகுதியற்றவனாக இருக்கிறான் என்கின்றோம்.

திராவிடனின் எல்லாத் தகுதியையும் இந்து சமயம் என்னும் ஆரியப்பாம்பு விழுங்கிவிட்டது. அதனால்தான் சிவபக்தனாகவும், வைணவ பக்தனாகவும் இருந்துகொண்டு கொட்டையும் பட்டையும் அணிந்து ஆரியத்திற்குச் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்கிறான். அதனால்தான் நல்ல வீரமுள்ள திராவிடன் வெட்கம், மானம், சொரணை, சூடு இல்லாமல், நான் க்ஷத்திரியன், நான் வைசியன், நான் நல்ல இந்து என்று சொல்லிக்கொண்டு பார்ப்பானுக்குக்(பிராமணனுக்கு) கீழ்ஜாதியாய் இருப்பதைப் பெருமையாய்க் கருதுகிறான். க்ஷத்திரியன் என்றாலும், சூத்திரன் என்றாலும், பிராமணனுக்குக் கீழானவன் என்றுதானே கருத்து. அதைத் திராவிடன் தானாகவே சொல்லிக்கொள்கிறான் என்றால் சமநிலைக்குத் தகுதி அற்றவன் என்றுதானே கருத்து?

சிந்தித்துப் பாருங்கள், திராவிடத் தோழர்களே இஸ்லாம் என்றால் உங்களுக்கு ஆத்திரம் வருகிறது; க்ஷத்திரியர், வைசியர் என்றால் பெருமை அடைகிறீர்கள். சூத்திரர் என்பதை இழிவு என்று கருதமாட்டேன் என்கிறீர்கள். இப்படிப்பட்ட நீங்கள் இந்துவாய் இருக்கும்வரை மானத்துக்கும், மனிதத்தன்மைக்கும் தகுதி அற்றவர்கள் என்பது கல்போன்ற உறுதியாகும். ஆகவே இந்து மதத்தைவிட்டு வெளிவாருங்கள்; உடனே நீங்கள் தகுதி ஆனவர்கள் ஆகிறீர்களா இல்லையா என்று பாருங்கள்.

இந்தக்கோடைவிடுமுறையில் எந்த இடத்திலாவது ஒரு மகாநாடு கூட்டுங்கள். எதற்காக என்றால் திராவிடர்கள் மதத்தைப்பற்றி யோசிப்பதற்குத்தான். அல்லது இந்தக் கருத்துக்கொண்ட சுருக்கமான ஒரு பெயர் வைத்து ஒரு மகாநாடு கூட்டுங்கள். எல்லாத் திராவிட இளைஞர்களை, தாய்மார்களைப் பெரிதும் 10 ஆயிரக்கணக்கில் கூட்டுங்கள். கூடி சிந்தியுங்கள். தகுதிக்கு வழி பிறக்கிறதா இல்லையா பாருங்கள். வெறும் பூச்சும், பட்டையும் திராவிடருக்கு இனி ஏச்சும், இழிவும்தான் தரும். இளைஞர்களே நீங்களாவது சிந்தியுங்கள்.

கிருஷ்ணன்—பாகவதர்

கலைக்களஞ்சியங்களான கிருஷ்ணன்—பாகவதர் வழக்கு அப்பீல் பிரிவிகவுன்சிலில் முடிவு செய்யப்பட்டு விட்டது.

முடிவு என்னவென்றால் அப்பீலைச் சென்னை ஐகோர்ட்டே முடிவுசெய்யவேண்டும் என்பதுதான். இந்த முடிவில் எதிரிகள் மனத்தளர்ச்சி அடைய எதுவும் இல்லை. மனமகிழ்ச்சிக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. என்னவென்றால் கீழ்க்கோர்ட்டுத்தீர்ப்புக்குஆதாரம் ஜூரிகள் தங்கள் சொந்த அபிப்பிராயமாகக் கூறியதான "எதிரிகள் குற்றவாளிகள்" என்ற சொல்லேயாகும். இந்தச் சொல்லானது ரிக்கார்டுகளின் தன்மையையும், சட்டநீதிகளையும்தாண்டி "ஜூரிகள் இஷ்டம்" என்னும் காரணமாய் எதிரிகளைத் தண்டிக்கச் செய்துவிட்டது. சட்டம் அதுதான் என்று அப்பீல் ஹைகோர்ட் ஜட்ஜும் தண்டனையை ஊர்ஜிதம் செய்துவிட்டார்.

அப்போதே பெரியார், அப்படிப்பட்ட சட்டத்தை மாற்றியாகவேண்டும் என்றும், காரணம் ஜூரிகள் பெரிதும் சட்டம் தெரியாதவர்கள் என்றும், நியாயஸ்தலங்கள், நியாயவாதிகள், நியாய விசாரணை என்பவை சட்டத்தைப் பொறுத்ததென்றும், ஆகவே இந்தத் தண்டனை அதிருப்திகரமானது என்றும் பல இடங்களில் சட்டக் குறையைப்பற்றிப் பேசி இருக்கிறார்.

இப்போது பிரிவிகௌன்சிலில் "ஜூரிகள் சொன்னதாலேயே ஆதாரமாய்க்கொண்டு தண்டிக்கவேண்டிய அவசியமில்லை, தண்டிப்பதற்குச் சட்டப்படி உண்டான ஆதாரங்கள் ருஜூக்கள் இருக்கின்றனவா என்று பார்த்து முடிவு சொல்லவேண்டும்" என்று சொல்லிவிட்டார்கள்.

ஆதலால் நியாயம் செல்ல இடமேற்பட்டு விட்டது. இனி நியாயத்தைப்பற்றி மனதில் எவ்வித பயமும் இல்லாமல் யாவருமே மகிழ்ச்சி அடையலாம் என்றே கருதுகிறோம், ஆகவே,

கிருஷ்ணன்—பாகவதர்!
வெற்றி! வெற்றி!!

என்று வெற்றி முழக்கம் செய்வோமாக.

டாக்டர் அம்பெத்கார் மாணவர் இல்லத்தின் 2-வது ஆண்டுவிழா

திருச்சியில் 17-3-47 மாலை 5மணிக்குப் பெரியாரவர்களின் சீரிய தலைமையில் டாக்டர் அம்பேத்கார் மாணவர் இல்லத்தின் 2வது ஆண்டுவிழா திருச்சி முனிசிபல் கொட்டகையில் நடைபெற்றது. விழாவுக்குப் பெருந் திரளான மக்கள் வந்திருந்தனர். இல்லத்தின்

ஸ்தாபகர் தோழர் வ. வீராசாமி பெரியாரவர்கட்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்து மாலையிட்டார். மான்பிடி மங்கல ஷெடியூல்டு வகுப்பு இளைஞர் கழகத்தார் ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்தனர். பல ஷெடியூல்டு வகுப்புக் கழகங்கள் சார்பில் பெரியாரவர்கட்கு மாலையிட்டனர்.

பெரிய ஆரவாரத்துக்கிடையே பெரியாரவர்கள் எழுந்து, இந்நாட்டிலுள்ள தீண்டாமை முதலிய கொடுமைகளுக்குக் காரணம் ஆரியர்களால் ஏற்படுத்தப்பட்ட இந்த மதமும், சாதி வெறி பிடித்த இந்த சமூகமுந்தான் என்றும், தீண்டாமை, சாதிமத வித்தியாசங்கள் முதலிய இழிவுகள் நீங்கவேண்டுமானால் இந்த மதத்தை அறவே வெறுத்து ஷெடியூல்டு வகுப்பினர் வெளிவரவேண்டுமென்றும், இதுதான் தன் நீண்டநாள் அனுபவத்தில் கண்ட மருந்து என்றும் கூறினார்.

மேலும் பேசுகையில், காங்கரஸ்காரர்கள் ஆங்காங்கு சில கோயில்களைத் திறந்துவிடுவதைக்கண்டு ஆதிதிராவிடர்கள் மயங்கிவிடக்கூடாது என்றும், இன்னும் பல சலுகைகள் காட்டினாலும் இவையாவும் தூண்டிலில் கோர்க்கும் பொருள்கள் தானே தவிர வேறில்லை என்றும், இவையாவும் முஸ்லிம்களுக்கும், திராவிடர்களுக்கும் எதிராக ஷெடியூல்டு வகுப்பினரை உபயோகப்படுத்தச் செய்யும் சூழ்ச்சிகள் என்றும், ஆகையால் மிக விழிப்புடன் இருக்கவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

பிறகு திராவிடர் கழகத் தலைவர் தி. பொ. வேதாசலம் அவர்களும், பி. சிவபிச்சை அவர்களும் பேசினார்கள். நன்றிகூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது.

பெரியாரவர்கள் விடுதிக்கு ரூபாய் 100 நன்கொடை அளித்தது குறிப்பிடத்தக்கது.

பெயரிடல்

வேலூருக்கடுத்த திராவிடர் கழகத் தோழர்கள் ஜி. டி. சண்முகவடிவு—பாலசுப்ரமணியம் தம்பதிகளுக்கு 29-11-46ல் பிறந்த ஆண்குழந்தைக்கு ஷையூர் திராவிடர் கழகத் தோழர் கோ. தி. சந்திரசேகரன் அவர்களால் நெடுஞ்செழியன் என்ற பெயர் சூட்டப்பட்டது.

o o

மதுரைநகர் திராவிட கழக அங்கத்தினர் தோழர் க. கு. முத்துச்சாமி அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் இல்லையம்மாளுக்கு 19-2-47ல் ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்குக் குலசேகரன் என்ற பெயர் சூட்டப்பட்டது.

செ. தெ. நாயகம் மண்டபம் திறப்புவிழா

16-3-47ல் தியாகராயநகர் உயர்தர ஆரம்ப கலாசாலைகளின் வருடாந்தர விழாவை ஒட்டி தியாகராயநகர் கலாசாலையில் 'செ. தெ. நாயகம் மண்டபம்' திறப்புவிழா நடைபெற்றது. விழாவிற்கு கல்வி மந்திரியார் அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் தலைமைவகித்தார். மாணவர்களுக்குப் பெஷாவர் தோழியர் கண்ணா அவர்கள் பரிசு வழங்கினார்கள். சென்னை கல்வி அதிகாரி தோழர் வி. நடராசன் பி. ஏ. எல். டி. அவர்கள் சொற்பொழிவாற்றினார். தலைமையாசிரியர் தோழர் கே. ஆர். நாதன் பி. ஏ., எல். டி. அவர்களும், ஆசிரியர் ப. செல்வம் அவர்களும் விழாவில் கலந்துகொண்டனர். பள்ளிப்பிள்ளைகளால் நற்சுவைமிக்க பல்சுவைக்களிப்பு நடைபெற்றது.

அனுதாபம்

மதுரை திராவிட நியூஸ் ஏஜண்டும், திராவிடர் கழகத் தோழருமான எம். எஸ். ராமையா அவர்களின் இரண்டு வயதுடைய பெண் குழந்தை 10-3-47ல் இயற்கை எய்தியது கேட்டு பெரிதும் வருந்துகிறோம். அன்னாருக்கு எங்கள் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

அனுதாபக் கூட்டங்கள்

ஈரோடு லீக் காரியதரிசியும், முகா உணவுக்கமிட்டி உபகாரியதரிசியும், ஆயில் மர்ச்செண்ட் அசோசியேஷன் உப தலைவரும், பிரபல வியாபாரியும், பொதுஜன சேவையாளருமான ஜனாப் கே. கே. அப்துல் சலாம் சாயபு அவர்கள் இரண்டுநாள் காய்ச்சலாயிருந்து 26-3-47 பகல் $1\frac{1}{4}$ மணிக்கு இயற்கை எய்திவிட்டார்.

அவர் இயற்கையெய்தியதற்கு அனுதாபம் தெரிவிக்கும் முறையில் 28-3-47 வெள்ளிக்கிழமையன்று ஈரோட்டில் பலர் கடையடைப்பு செய்தனர். அன்று மாலை பெருந்தளர்வைத்திற்குப் பின்னர் 6 மணிக்கு ஜின்னா மைதானத்தில் தோழர் கே. பாஷா சாயபு தலைமையில் ஓர் அனுதாபக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் எல்லாக் கட்சியினரும் சுமார் 2000பேர்களுக்குமேல் கலந்துகொண்டனர். பெரியார் ஈ. வெ. ராமசாமி, நகராண்மைக் கழகத் தலைவர் ஆர். கே. வெங்கிடசாமி, எஸ். மீனாட்சிசுந்தர முதலியார், நகர காங்கரஸ் கமிட்டித் தலைவர் எஸ். சித்தையா, கம்யூனிஸ்ட்கட்சிக் காரியதரிசி, ஈ. ஆர். கோவிந்தசாமி, திருப்பூர் எச். எம். மொய்தீன், கோவை என். எஸ். பாபா, சேலம் பி. ஏ. இஸ்மாயில் ஆகிய தோழர்கள் சலாம் அவர்களின் சேவைகள், குணாதிசயங்கள்பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். இரவு 10 மணிக்கு ஏ. மைதீன் பாட்சா [லீக் உபகாரியதரிசி] நன்றிகூற கூட்டம் முடிவுற்றது. கூட்டத்தில் சலாம் குடும்பத்தாருக்கு அனுதாபம் தெரிவித்து ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

o o

30-3-47ல் செவ்வாய்ப்பேட்டை சுயமரியாதைச் சங்கக்கட்டிடத்தில் தோழர் எஸ். வி. மணி அவர்கள் தலைமையில் க. ரு. வை. அர்த்தநாரி அவர்கள் 16-3-47ல் இயற்கை எய்தியது குறித்து ஓர் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. ஏ. சித்தையன், பி. தனபால், எஸ். வி. கந்தசாமி, கே. ஆர். சுப்ரமணியம் ஆகிய தோழர்கள் அர்த்தநாரி அவர்களின் சேவையைப் பாராட்டிப் பேசினர். ஓர் அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தும் மக்களுடன் சேர்ந்தவர்களாகச் சொல்லிக்கொண்டு மானம் சுதந்திரம் இல்லாமல் இழிவாழ்வு வாழ்வதற்கு மனம் சகிக்கக் காரணம் என்னவென்றால் பார்ப்பான் நம்மை இஸ்லாத்துக்கு எதிரிகளாக ஆக்கி, அதைப் "பேய், பிசாசு, பூச்சாண்டியாக" போதித்து இருப்பதைத் தவிர வேறு காரணம் என்ன சொல்லமுடியும்? நம்மிடத்தில் இல்லாத கெட்டப் பழக்கம் இஸ்லாத்தில் என்ன இருக்கிறது? இஸ்லாத்தில் இல்லாத நல்ல பழக்கம் நம்மிடத்தில் என்ன இருக்கிறது? நாம் எந்த நல்ல காரியத்தைச் சீர்திருத்தத்தைச் செய்வதை இஸ்லாம் தடுக்கிறது?

"கையை வெட்டினாலொழிய பிழைக்கமாட்டாய்" என்று டாக்டர் சொன்னால் வெட்டிவிட சம்மதிக்கிறோம். "காலை வெட்டினால் ஒழிய பிழைக்கமாட்டாய்" என்றால் காலை வெட்டிவிட சம்மதிக்கிறோம், மலஜலம் கழிக்க வேறு ஓட்டைப் போட வேண்டுமென்றால் போட்டுக்கொண்டு அதில் மலஜலம் கழிக்கிறோம், எடுத்துவிட வேண்டும் என்றால் கர்ப்பப் பையை எடுத்துவிடச் சம்மதிக்கிறோம்; இன்னும் முக்கிய உறுப்புகளை, முக்கிய பண்டங்களை இழந்தாவது உயிர் வாழ சம்மதிக்கிறோம்.

அப்படி இருக்க ஒரு அயோக்கியக் கூட்டம் நம்மை ஜெயித்து, அடிமையாக்கி, தங்களுக்கு அடிமை என்கின்ற தத்துவம் கொண்ட ஒரு கொள்கையை நம் மீது பலாத்காரத்திலும், தந்திரத்திலும் புகுத்தி இழிவு படுத்தி வைத்திருப்பதை ஒழிக்கவேண்டும் என்றால் இதற்கு இவ்வளவு யோசனை, எதிர்ப்பு, தயக்கம், வெட்கம் என்றால் இந்த இழிவு எப்பொழுதுதான் எந்த வகையில்தான் மறைவது என்று கேட்கிறேன். என்மீது கோபிப்பவர்கள் இதற்குப் பரிகாரம் சொல்லாமல் கோபித்தால் அவர்களை வெறும் வெறியர்கள் என்றுதானே அறிவாளிகள் சொல்லுவார்கள்.

கோபிக்கும் தோழர்களே! வேத சாஸ்திரங்களை, புராண இதிகாசங்களை நெருப்பிலிட்டுக் கொளுத்துவதால் சூத்திரப்பட்டம் ஒழியப்போவதில்லை, கோவில்களை இடிப்பதாலோ விக்கிரகங்களை உடைத்து தூளாக்குவதாலோ, சூத்திரப்பட்டம் ஒழியப் போவதில்லை மறுபடியும் தோசைத் திருப்புவது போல் பழையபடித் திருப்பிவிடப் பார்ப்பனருக்குத் தெரியும், முடியும். திராவிடன் என்று சொல்லிக்கொள்வதால் மாத்திரம் சூத்திரப்பட்டம் ஒழியப்போவதில்லை. இன்றைய நிலைமையில் நான் இந்துவல்ல என்று சொல்லிக்கொண்டாலும் சூத்திரப்பட்டம் ஒழியப்போவதில்லை இந்து மதம் இலேசில் ஒழியாது அது பச்சோந்திபோல் சுலபத்தில் சாகும் மதமல்ல. அதைச் சாகடிப்பதற்கு நம் ஆயுளும் நம் பேரன்மார் ஆயுளும்கூடப் போதாது. ஆகவே நாம் அதை (இந்து மதத்தை) விட்டு விலகுவதுதான் நம் ஆயுளில் முடியக்கூடிய காரியமாகும். அந்தப்படி நாம் விலகினோமேயானால் நாம் யார் என்று சொல்லிக்கொள்வது? இன்றையநிலைக்கு ஒரு பெயர்வேண்டும். அதைப் புதிதாக உண்டாக்க வேண்டும், பரப்பவேண்டும், அதை இன்றைய காந்தி சர்க்கார் ஏற்றுக்கொள்ளும்படிச் செய்யவேண்டும், அதற்குச் சட்டம், சம்பிரதாயம் செலாவணி ஏற்பட வேண்டும், அதற்கு உண்டான பிரதிநிதித்துவம் உரிமை நிர்ணயித்து ஒப்புக்கொள்ளச் செய்யவேண்டும். இவ்வளவும் செய்வதென்றால் பார்ப்பன எதிர்ப்புக்கும், சூழ்ச்சிக்கும் பனியாக்கள் ஆதரவுக்கும் முன்னால் சுலபத்தில் ஆகக்கூடியதா? நம் நெல்லிக்காய் மூட்டை சமுதாயத்தால் நினைக்கக்கூடியதா? என்பதையும் சிந்தியுங்கள். பிறகு இப்படி எல்லாம் இல்லாமல் இந்தக் கஷ்டங்களுக்கும், முடியாமைக்கும் ஆளாகாமல் ஏற்கனவே ஏற்பட்டு உலகம் பூராவும், செல்வாக்கும் செலாவணியும் பெற்று, எவரும் சிந்தித்துச் சிந்தித்து ஒப்புக்கொண்டு அமுலில் இருந்து வருவதும், நமது உண்மையானதும், உரிமையானதுமான கொள்கை கொண்டதுமாய் இருக்கும் சமுதாய சமத்துவ சமயத்தை "நான் தழுவிக்கொண்டேன்" என்று சொல்லுவதில் என்ன தப்பு, என்ன கஷ்டம் என்பதையும் சிந்தித்துப் பாருங்கள்.

வேறு வழி சொல்லுங்கள்

இஸ்லாம் என்றால் உங்களுக்குக் கசப்பும் கோபமும் ஏற்படக் காரணம் என்ன? இந்து என்றால் உங்களுக்கு ஒரு இனிப்பும், திருப்தியும் ஏற்படக் காரணம் என்ன என்பதை முதலில் விளங்கிக்கொள்ளுங்கள். அல்லது இதற்கு (உங்கள் சூத்திரப்பட்டம் இழிவு நீங்க உங்கள் காலத்தில் நீங்க) ஏதாவது ஒரு வழி சொல்லுங்கள். என் அபிப்பிராயத்தை நான் சொன்னேன். உங்கள் அபிப்பிராயம் நீங்கள் சொல்லுங்கள். வாதம் பிரதிவாதம் செய்து கொண்டு வம்பளந்துகொண்டே இருந்துவரும் காலம்கடத்தி நாம் சூத்திரனாக, நம் பின்சந்ததிகளையும் சூத்திரனாக இருக்கும்படி விட்டுவிட்டுச் சாவதா? இப்படியே செத்தால் பார்ப்பானுக்குத்தான் லாபம், நம் பின்சந்ததிகளால் அவனுக்குத் தெவசமும் தெய்வாராதனையும் கொடுக்கப்படும், ஆதலால் அவன் இதற்குச் சீக்கிரம் ஒரு முடிவேற்பட விடமாட்டான். நமக்குள் அடிதடி வரையில் கொண்டுவந்து விட்டுவிடுவான், எனவே யோசியுங்கள், தயவு செய்து ஆழ்ந்த கவலையோடு யோசியுங்கள். ஆரியமத அபிமானம் என்னும் வெறியை விட்டு விட்டு, மான அபிமானம் வைத்து யோசியுங்கள். கோபியாதீர்கள்.

சிந்தித்து ஒரு முடிவுக்கு வராமல், இஸ்லாம் மார்க்கமும், இந்து மார்க்கமும், இரு மார்க்க மக்களும் முட்டிக்கொண்டால் நட்டம், அடி, உதை, சாவு திராவிடனுக்குத்தான், பார்ப்பானுக்கு எவ்வித நட்டமும் இல்லை என்பது மாத்திரமல்லாமல் அவருக்கு வரும்படி உண்டு இகலோக கோர்ட்டில் பீசு, லஞ்சம், பரலோக கோர்ட்டில் திதி, திவசம் முதலிய வைதீகச் சடங்கு இவைகளால்தானே ஆரியர்கள் இன்று மேல்நிலையில் வாழ்ந்துகொண்டு நம்மை தனது அடிமையாக, வைப்பாட்டி மகன் என்பதாகச் சட்டம், சாஸ்திரம் வகுத்து இழிவுபடுத்தினான் என்பதல்லாமல் வேறு எதனால்?

ஆகவே மற்றொருமுறைச் சிந்தியுங்கள்.

மறுபடியும் எழுதுகிறேன்.

மதிப்புரை

"உடுமலை பீரங்கி"

உடுமலை பீரங்கி என்ற மூதக் புத்தகம் உடுமலைத் தோழர் பி இரங்கநாதநாயுடு அவர்களால் எழுதப் பெற்றது. ஆசிரியர் இரங்கநாத நாயுடு தனது அரசியல் அநுபவத்தை யும், கருத்தையும் தெளிவுற எழுதி யுள்ளார். சினிமா நடிகர்களின் சீர் கெட்ட நிலையை எடுத்துக்காட்டி, சீர்திருந்தவேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

விலை அணா 12.

கிடைக்குமிடம்:-

B. R. &Sons,
33, திருவேங்கடமுதலி தெரு,
பெரியமேடு, சென்னை 3.

வேளாளன்

தோழர் குழந்தை அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்ட வேளா ளன் என்ற மாதவெளியீடு கைவரப் பெற்றோம். முதலியார், பிள்ளை, செட்டியார், கவுண்டர் முதலிய பட் டப்பெயர்களைத் தாங்கிய எல்லா வேளாளர்களை [illegible] த்தையே அடிப்படையாக [illegible] கொண்டு வேளாளன் [illegible] வருகிறது. வேளாளர் சீர்திருத்தத்தை வற்புறுத்தும் கட்டுரைகளும், கவிதை களும் வேளாளனில் மிளிர்கின்றன.

இதன் விலை தனிப்பிரதி 4அணா
ஆண்டுசந்தா 3-ரூபாய்.

கிடைக்குமிடம்:-

வேளாள நிலையம், பவானி.
வழி (ஈரோடு)

இயக்கச் செய்திகள்

பேரளூர், மார்ச். 10—

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் சிதம்பரத்திலிருந்து ஆர்க்காடு போகும் வழியில் பேரளூர் புகை வண்டி நிலையத்தில் ஷையூர் திராவி டர் கழகத்தின் சுமார் 500பேரும், கருஞ்சட்டையினர் சுமார் 100பேரும் பெரியாரைச் சந்தித்துத் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்ட னர். அவர்களின் வேண்டுகோளுக் கிணங்க பெரியார் பேரளூர் பஞ்சா யத்து போர்டு சார்பில் ஏற்படுத்தப் பட்டிருக்கும் 'சிவராஜ் நகர்' திறப்பு விழா வாற்ற வருவதாக ஒப்புக் கொண்டார்.

o o

பேரளூர் திராவிடர் கழகப் பொரு ளாளர் தோழர் மூ. தா. ரா. ராஜா அவர்களின் சகோதரரும், திராவிடர் கழக உறுப்பினருமான, சுமார் 20-வயதுடைய விசுவநாதன் திடீரென இயற்கை எய்தியது குறித்து ஓர் இரங்கக்கூட்டம் மாயவரம் தோழர் இரத்தினசபாபதி அவர்கள் தலை மையில் நடைபெற்றது. பல சங்கங் களின் சார்பில் இரங்கற்பாக்கள் வாசித்தளிக்கப்பட்டன. வித்துவான் வே. ஐயா, வித்துவான், அ. குப்பு சாமி, ரா. பற்குணம், ம சிதம்பரம் கே. சுப்பிரமணியம், கே. ரங்கநாத குப்தா, கே. வி. சீனிவாசன், ந. ஆறு முகம், மூ. தா. ரத்தினவேலு ஆகிய தோழர்கள் பேசினார்கள்.

திராவிடர் கழகத்தைச் சேர்ந்தார்

நீண்டகாலமாகக் காங்கரசில் உழை த்துவந்த பிரபல காங்கரஸ்காரரும், திருப்பூர் ராயபுரத்தில் வசிப்பவரு மான தோழர் எம் சின்னசாமி அவர் கள் 1-3-47ல் திராவிடர் கழகத்தில் அங்கத்தினராகத் தன்னைப் பதிவு செய்துகொண்டார்.

விற்பனைக்கு

எங்களிடம் 'குடி அரசு' பத்திரிகை களை ஒவ்வொரு வருடமும் தனித் தனியாக பைண்டு செய்த, அதாவது 4வது வருடம் முதல் 5, 6, 7, 8, 9 11, 12, 13, 15, 17, 18, 19வது வருடம் வரையில் உள்ள வால்யூம் கள் விற்பனைக்குத் தயாரில் இருக் கின்றன. ஒவ்வொன்றின் விலை ரூ. 7-8-0 சொற்ப வால்யூம்களே கைவசம் இருப்பதால், பாதித்தொகை முன்பணத்துடன் தேவைக்கு ஆர்டர் கொடுக்கவும். வால்யூம்களை இரயில் வே பார்சல் மூலம் பெற்றுக்கொள்ள வசதி உள்ளவர்களுக்குச் செலவு குறையும்.

குறிப்பு:- 16வது வருட குடி அரசு பைண்டு வால்யூம் மட்டும் நான்கு மாதங்கள் கொண்டதாக இருப்ப தால் அதன் விலை ரூ 3-0-0.

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

வேண்டுகோள்

தியாகராயநகர் உயர்நிலைப் பள்ளி நிதிக்காக 9-4-47 புத னன்று மாலை 7மணிக்குச் சென்னை பீப்பிள்ஸ் பார்க்கு வி. பி. ஹாலில், தஞ்சை நகராட் சித் தலைவர் ராவ்பகதூர் ஏ. ஒய். அருளானந்தசாமி நாடார் அவர்கள் தலைமையில் "பாலச் சந்திரன்" என்ற தமிழ் நாட கம் நடைபெறும்.

அரசாங்கப் பத்திரத்தில் பள் ளிக்கூட ஆதரவு நிதியாக 50000 ரூபாய் போட வேண்டி யிருப்பதால் இந்நாடகத்தின் மூலம் நிதி வசூல் செய்யப்படு கிறது.

இந்நாடகத்தில் வசூலாகும் பணம் ஷை பள்ளிக்குப் பொரு ளுதவி செய்தவரும், முன்னாள் ஆட்சியாளராக இருந்தவரு மான காலஞ்சென்ற சி. டி. நாயகம் அவர்களின் நினைவாக் ஷை பள்ளி நிதிக்குச் சேர்க்கப் படும்.

ஏழை மாணவர்களுக்கும், தாழ்த்தப்பட்ட மாணவர்களுக் கும் உணவு, தங்குமிடம் முதலிய வசதிகள் ஷை பள்ளிக்கூடத் தில் அளிக்கப்பட்டுவருகின் றன.

எனவே ஷை நாடகத்திற்குப் பொதுமக்கள் பெருந்திரளாக வந்தும், வேறு வகைகளில் நன் கொடைதந்தும், எங்கள் பணி க்கு ஆதரவளிக்கவேண்டுகி றேன்.

எஸ். முத்தையா முதலியார்,
தலைவர்.
தியாகராயநகர் உயர்நிலைப்
பள்ளி உதவி நிதிக்கழகம்.

(கட்டணம்:- ரூ. 50, 25, 10, 5, 3, 2 டிக்கட்டுகள் 8-4-47 வரை பள்ளிக்கூடத்திலும், நாடக நாளில் வி. பி. ஹாலிலும் பெறலாம்)

Edited, Printed, and Published by N.Karivaradaswamy at the Tamillan Press 42, Cutcherystreet, ERODE